# தீபத் திருநாள் !

தீபத் திருநாள் என்றே,
திரும்பிய இடமெல்லம்;
விளக்குகள் தெரியும் !

சொக்கப் பணை,
கோயிலில் எரியும்!
பிள்ளைகள் தீப்பொறி சுற்ற,
இல்லம் தோறும்,
அவல் பொரி செய்து,
தெய்வம் தொழுவர்!
வேலவன் என்றே,
விரும்பி அழைப்பர்!

தீர்ந்து போகாத,
எடுத்து வைத்த
தீபாவளி வெடிகள்,
கொண்டாட்டம் செய்யும் !

அடைமழை கொள்ளும்,
ஐப்பசி முடிந்த பின்;
தீபம் கொள்ளும்,
கார்த்திகைத் திங்கள்!

அவ்வபோது,
மழையும் பெய்யும்,
ஆனால், பணிகள் தொடரும்,
பக்தியும் மிளிரும்!

இற்றைத் திங்கள்,
ஐயகோ, எங்கும் மழை!
நீரும் புரண்டு,
நெறியின்றி ஓட,
தீபத் திருநாளும்
சேர்ந்து கொள்ளும்!
அனைவருக்கும் இனிய,
***!தீபத் திருநாள் வாழ்த்துக்கள்***
அன்புடன்,

**கவிவளவன்**

18-11-2021 (08-05 பி.எம்)